
www.tamilarangam.net

# சிறுவர் அமுதம்

கிண்ணம் 1 எண்ணம் 12

16.12.1990 மார்கழி



உயர்ந்த சிந்தனைகளை நடைமுறைகளுக்குக் கொண்டு வந்தால் பெருஞ் செயல்களாகும்

## சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

## CHILDREN LITERATURE MAGAZINE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆசிரியர் கருத்து

அன்புச் சிறுவர்களே.

உங்கள் அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். உங்களுக்கு அனுப்பிய படிவங்கள் பெருமளவில் வந்து கொண்டிருக்கின்றன. உங்களுடைய விருப்பங்கள் நன்றாகத் தெரிகின்றன. குழந்தைகள் விரும்புகிற எல்லாவற்றையும் பெற்றோர்கள் வாங்கிக் கொடுக்க மாட்டார்கள். ஆனால் முடிந்தவரையில் நல்லவற்றை, தமது வசதிக்கேற்ப வாங்கிக் கொடுப்பார்கள்.

நானும் அந்த நிலையில்தான் இருக்கிறேன். எனக்கு வசதியே பெரிய பிரச்சினையாக உள்ளது. ஆனாலும் உங்கள் விருப்பங்கள் புதுவருடத்தில் இருந்து படிப்படியாக நிறைவேற்றுவதாக எண்ணியுள்ளேன்.

ஜெர்மனியில் இருபதுக்கும் மேற்பட்ட தமிழ்ச் சஞ்சிகைகள் வெளிவருகின்றன. அவற்றில் பெரும்பாலானவை சமூக நிறுவனங்களான கரிதாஸ், டியாகோனி போன்றவற்றின் உதவியுடன் வெளிவருகின்றன. சிறுவர்களின் சஞ்சிகையான "சிறுவர் அமுதம்" எந்தவொரு சமூக நிறுவனத்திற்கும் தெரிந்திராத ஒரு சஞ்சிகையாகவே உள்ளது.

தனித்த ஒரு முயற்சியாக இச்சஞ்சிகையை பல சிரமங்களுக்கு மத்தியில் கொண்டு வர வேண்டியுள்ளது. ஜெர்மனியில் பல சஞ்சிகைகள் பல்வேறு மாநிலங்களிலிருந்து வெளியாகிக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டிருக்கின்றன. இவற்றின் பெயர்களைக் குறிப்பிடுமாறு சென்ற இதழில் கேட்டிருந்தேன். இவற்றில் ஐந்து சஞ்சிகைகளின் பெயர்களைக் கூட உங்களினால் குறிப்பிட முடியவில்லை. பலர் அமுதத்தை தவிர வேறு எதனையும் தெரியாது என எழுதியுள்ளீர்கள். இன்னும் பலர் உலகவிமர்சனம், நம்நாடு, அறுவை போன்ற நின்றுபோன சஞ்சிகைகளின் பெயர்களைக் குறிப்பிட்டிருந்தீர்கள்.

இங்கு வெளியாகும் சில சஞ்சிகைகளில் சிறுவர் பகுதிகள் ஆரம்பிக்கப்பட்டாலும் அவை திருப்திகரமாக இல்லாது இருப்பதும், இவற்றைக் கவனத்திற் கொண்டு சிறுவர் அமுதம் முழுமையாக சிறுவர் சஞ்சிகையாகவே வெளியாவதுடன் உங்கள் திறமைககளை வெளிக் கொண்டுவருவதில் முழு முயற்சிகளையும் மேற் கொள்ளு கின்றது.

அன்புடன்
அமுதம் ஆசிரியர்

---

## ங்கள் இதை நம்புகிறீர்களா?

பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை தற்காலத்திய வைத்திய முறை
தமது இறக்கைகளை ஆட்டியே பறவைகள் ஆகாயத்தில் இருக்க முடிகின்றன.
ஒரே இடத்தை மின்னல் இருமுறை தாக்குவதே இல்லை.

**ஆம், இல்லை**

இந்திய வைத்தியர் சுஸ்ருதர் இந்த முறையைக் கையாண்டவர். இவர் கி. மு. 8-7 நூற்றுண்டில் வாழ்ந்தவர்.
பறவைகள் மணிக்கணக்கில் தம் இறக்கைகளை ஆட்டாமலே ஆகாயத்தில் இருக்க முடியும்.
இடி எவ்வளவு முறை வேண்டுமானாலும் ஒரு இடத்தையோ கட்டடத்தையோ தாக்கலாம்.

## பிறர் துன்பம் காண சகிக்காத சோதரர்

அண்ணன் முரட்டுப் பையன் ஏதோ தவறு செய்து விட்டான். அப்பாவுக்கு அளவு கடந்த கோபம். தவறு செய்த அண்ணனுக்குத் தண்டனை கொடுக்க ஆரம்பித்து விட்டார்.

அப்பாவின் கைத்தடி அண்ணனின் உடம்பைப் பதம் பார்க்கத் தொடங்கியது. அண்ணன் "ஐயோ...ஐயோ என அலறினான்.

பக்கத்து அறையில் படித்துக் கொண்டிருந்த அவன் தம்பியின் காதில் அலறல் சத்தம் விழுந்தது. உடனே புத்தகத்தை வீசி எறிந்தான். அறையை விட்டு வெளியே ஓடி வந்தான். நடப்பதைக் கண்டான்.

அண்ணன் துடிதுடிப்பதைக் காண தம்பியில் சகிக்க முடியவில்லை. அவன் கண்கள் கலங்கின.

"வேண்டாம் அப்பா! அண்ணனை அடிக்காதீர்கள்." என்று கத்தினான். ஆனால் அடி ஓயவில்லை. அண்ணனின் அலறலும் நிற்கவில்லை.

தம்பி என்ன செய்வதென்று யோசித்தான். குபீரெனப் பாய்ந்.து அண்ணனை இறுகக் கட்டிக் கொண்டான். அதை எதிர்பாராத அப்பாவின் இரண்டு அடிகள் அவன் மீதும் விழுந்தன. அவனும் துடிதுடித்தான்.

அப்பா அடிப்பதை நிறுத்தினார். தன் சின்ன மகனை வாரியெடுத்தார். அணைத்துக் கொண்டார்.

அந்த நல்ல தம்பி அவரது செல்ல மகன். அண்ணன் கஷ்டப் படுவதைக் காணச் சகிக்காமல் தானும்

www.tamilarangam.net



அடிவாங்க வந்தானே. நானும் அடித்துவிட்டேனே என்று அப்பா வருந்தினார். அண்ணனும் தப்பினான். தம்பியை நன்றியுடன் பார்த்தான்.

இப்படி அண்ணனின் நிலை கண்டு வருந்தி அந்த வேதனையில் பங்கு கொள்ளச் சென்ற தம்பி யார் தெரியுமா? அவன்தான் பிரெஞ்சு நாட்டு மக்களின் துயரம் கண்டு துடிதுடித்தவன். அவர்களின் விடுதலைக்காகப் பாடுபட்டவன்'. பிரெஞ்சு நாட்டுப் பேரறிஞர் ரூஸோ!

•அர்மான் சாலிக் முஹமட்

---

"சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடைசெய்யாதீர்கள். ஏனெனில் மோட்ச ராஜ்ஜியம் (சொர்க்கம்) அவர்களுடையதே" என்று, கூறியவர் வேறு யாருமல்ல. இன்று உலகம் முழுவதும் கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாடக் காரணமான யேசு கிறிஸ்து தான்.

அவர் பிறந்த தினம்தான் கிறிஸ்மஸ் பண்டிகை ஆகும். இதை நத்தார் பண்டிகை என்று சொல்வார்கள் பண்டிகை கொண்டாட்டம் ஒரே கருத்தைக்கொண்டுள்ளன.

2000 ஆண்டுகளுக்கு முன்னர் இறைவன் மனித உருவில் பெத் லேகம் நகரில் கன்னி மரியாள்



## கிறிஸ்தவ பண்டிகை

www.tamilarangam.net



சூசையப்பர் என்போருக்கு மகனாக வந்து பிறந்தார். அவர்தான் யேசு கிறிஸ்து ஆவார்.

இளவயதில் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து நடந்து கொண்டார். சிறுவர்கள், ஏழைகள் நோயாளிகள் என்பவர்களுடன் அன்பாய் இருந்தார். இவரது பேச்சுக்களும், செய்கைகளும் இவரைக் கடவுள் எனக் காட்டின. ஆனால் அன்றைய அரசும், மதவாதிகளும் இவரைக் கூடாதவர், குழப்பக்காரர், என்று குற்றஞ் சாட்டினார்கள். சிலுவையில் அறைந்து மரணதண்டனை வழங்கினார்கள். ஆனால் அவர் மூன்றாம் நாளில் உயிர்த்து எழுந்ததாக கிறிஸ்தவ மதநூலான பைபிள் (வேதாகமம்) கூறுகின்றது. கிறிஸ்தவர்களும் இதை உண்மையென்றே நம்புகிறார்கள்.

எது எப்படி இருப்பினும் அவர் உலகிற்கு கொண்டு வந்ததாகக் கூறப்படும் அமைதியும் சமாதானமும் இன்னும் தீர்க்கப்படாத பசியாகவே உள்ளது. இன்று உலகம் முழுவதும் ஏரேது மன்னர்களின் ஆட்சியாகவே உள்ளது. கிறிஸ்து நம்மில் பிறக்காதவரை அமைதி என்றும் ஏற்படப் போவதில்லை.

பெத்தலேகம் - இன்றைய இஸ்ரவேல் நாட்டில் உள்ளது
ஏரேது - யேசு கிறிஸ்துவைத் தண்டித்த அரசன்.

---

இந்த மார்கழி இதழை அழகாகவும், தரமாகவும், வித்தியாசமாகவும், தனது களைப்பற்ற கடின உழைப்பின் மூலம் தயாரித்த உங்கள் உண்மையான பாராட்டைப் பெறவேண்டிய, விளம்பரம் விரும்பாத அந்த நண்பனின் நட்பின் சின்னமாக இந்த இதழை வழங்குகின்றேன்

அன்புடன்

சின்ன இராஜேஸ்வரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 5வது வினாவிடைப் போட்டி முடிவுகள்.

சரியான விடைகள்.

1. ஜெர்மனியில் வெளிவரும் தமிழ்ச் சஞ்சிகைகள் சில அகரவரிசைப்படியாக:- அக்னி, அமுதம், ஏலையா, கதிர், கலைவிளக்கு, சிந்தனை, தளிர், தூண்டில், தேனி, நமதுகுரல், நாணல், பண்பாடு, பிரவாகம், மண், வெகுஜனம்... இன்னும் பல.

2.

| நகரங்கள் | அவைஉள்ளநாடுகள் |
|---|---|
| புதுடில்கி | இந்தியா (India) |
| ஜெனீவா | சுவிற்சலாந்து(switzerland) |
| கண்டி | இலங்கை(Srilanka) |
| பெர்லின் | ஜேர்மனி(Germany) |
| பரீஸ் | பிரான்ஸ்(France) |

3. பனையில் இருந்து பெறப்படும் பயன்கள்:- பனம்பழம், பனங்கிழங்கு, பனங்கட்டி, பனங்கள், கருப்பநீர், ஒடியல் என்று அநேகம் பெறப்படுகின்றது.

4. ஜெர்மனியின் தென்பகுதி எல்லை நாடான சுவிற்[illegible]வாந்தில்(Schweiz), ஜெர்மன்(டொச்), பிரெஞ்ச், இத்தாலி, ரோமன், என்ற நாலு மொழிகள் பேசப்படுகின்றன.

5. ZDF தொலைக் காட்சியில் பூனையை எலி வென்று விடுவதாக சிறுவர் நிகழ்ச்சி ஒளிபரப்பாபடுகின்றது அவை இரண்டு நிகழ்ச்சிகள் (Tom und Jerry, Mexicana)

www.tamilarangam.net



இம்முறை போட்டியில் 31 பேர் கலந்து கொண்டிருக்கின்றீர்கள் ஏறக்குறைய எல்லோரும் ஜேர்மன் சஞ்சிகைகள் தவிர்ந்த எல்லாக் கேள்விக்கும் சரியான விடை எழுதி இருக்கின்றீர்கள் 5 கேள்வி களுக்கும் சரியான விடை எழுதியவர்கள் விபரம்:-

(அ). செல்வி.ஜஸ்மின் ராஜ்குமார் 5138 Heinsberg
(ஆ). செல்வி.ஹேமா செல்வராஜா 5650 Solingen
(இ). செல்வி.விஜிதா இராமலிங்கம் 4712 Werne
(ஈ). செல்வி.சிவதர்சினி சிவராஜா 4100 Duisberg
(உ). செல்வி.ஜான்ஸி ராஜ்குமார் 5138 Heinsberg
(ஊ). செல்வன்.திருமுருகன் இராமலிங்கம் 4712 Werne
(ஐ). செல்வன்.துஷிந்தன்.வி 4270 Dorsten 21
(எ). செல்வன்.சிவகுமார் சிவசுப்பிரமணியம் 4714 Selm

இவர்களில் செல்வி ஜான்ஸி ராஜ்குமார் அதிஷ்ட சாலியாகத் தெரிவு செய்யப்பட்டு "வரலாற்றுக் கதை கள்" என்னும் புத்தகத்தைப் பரிசாகப் பெறுகிறார்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுகதைப் போட்டி (5)

<u>சரியான விடைகள்</u>.

(1). உள்ளங்கை
(2). தீக்குச்சிகள்(நெருப்புக்குச்சி) அல்லது பற்கள்
(3). பற்கள்
(4). ஒரு நாட்டின் அல்லது மாநிலத்தின் கொடி
(5). காசு அல்லது ஆகாயவிமானம்/ கடிதம்
(6). கதவு
(7). யானை
(8). தலை, தலைமயிர், பேன்
(9). அடி- வைக்கோல், அடிக்கட்டை
நடு- நெல்
நுனி- நெல்
(10). விளக்குத்திரி

சரியான விடைகளை பின்வருவோர் எழுதியிருந்தனர்.

செல்வி. விஜிதா இராமலிங்கம் 4712 Werne
செல்வி. சிந்துஜா நவரட்ணம் 4005 Meersbusch
செல்வி கபிலினி தெய்வேந்திரன் 5650 Solingen
செல்வன் திருமுருகன் இராமலிங்கம் 4712 Werne
செல்வன் கஜன் தெய்வேந்திரன் 5650 Solingen

இவர்களில்

செல்வி சிந்துஜா நவரட்ணம் 4005 Meerbusch 2 அதிஷ்டசாலியாகத் தெரிவு செய்யப்பட்டு "இந்துமதம் காட்டும் அமைதியும் ஆனந்தமும்" என்ற புத்தகம் பரிசாகப் பெறுகின்றார். ஏனையோர் அனைவரும் பாராட்டைப் பெறுகின்றனர்.

www.tamilarangam.net



## வினாவிடைப்போட்டி 6

1. ஐரோப்பாவில் ஒரே ஒரு நாட்டில் மட்டும் ஜெர்மன் (டொச்) மொழியும் பிரெஞ்ச் மொழியும் பேசப்படு கின்றது. அந்த நாட்டின் பெயர் என்ன?

2. யாழ்ப்பாணத்திற்கு அருகே உள்ள ஒரு பெரிய கிராமத்தின் பெயரானது ஒரு பறவையின் பெயரையும் காட்டுவாசிகள் (வேடர்) வைத்திருக் கும் ஆயுதத்தின் பெயரையும் இணைத்தால் வந்துவிடு கின்றது. அக்கிராமத்தின் பெயர் என்ன?

3. பனையின் இளமைப் பெயர் வடலி என்பது உங்களுக் குத் தெரியும். தென்னை, வாழையின் இளமைப் பெயர்கள் என்ன?

4. பின்வரும் சொற்களைக் குறிக்கும் வேறு சொற்கள் எழுதுக. (உ+ம் புத்தகம் - நூல், ஏடு)
   (அ) தாய்
   (ஆ) தந்தை
   (இ) சண்டை
   (ஈ) நித்திரை
   (உ) சிரிப்பு

5. Tele 5 தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் ஒரு நிகழ்ச்சி பற்றியது. இந்நிகழ்ச்சி மூலம் டொச் மொழி தெரிந்தவர்கள் தங்களின் மொழி அறிவை வளர்துக் கொள்ள உதவுகின்றது. பெருந் தொகை யான பணமும் வழங்கப் படுகின்றது. Kabel வசதி யில்லாத இடங்களில் RTL Plus மூலம் இந்நிகழ்ச்சி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒளிபரப்பப்படுகின்றது. இந்த நிகழ்ச்சியின் பெயர் என்ன?

விடைகளை 15.1 .91 இன் (16.01.91) வரை காத்திராமல் கூடிய விரைவில் அனுப்பி வையுங்கள். விடைத்தாளில் உங்கள் பெயர், விலாசம், பிறந்த திகதி, விரும்புகிற புத்தகம் என்பனவற்றை எழுத மறக்கவேண்டாம்.

---

விடுகதைப்போட்டி 6

1. குட்டை (சிறுகுளம்)யில் பிறந்து குடிசையில் வளர்ந்து சந்தையில் நின்று பந்தியில் படுப்பான் அவன் யார்?
2. பல்லுண்டு வாயில்லை. விழுந்த பல்லுக்கு முளையில்லை அது என்ன?.
3. சொன்னது எல்லாம் கேட்பான். சொல்லடா என்றால் சொல்லவே மாட்டான் அவன் யார்?
4. கண்ணில்லாதவன் ஆனால் குருடருக்கெல்லாம் வழிகாட்டுவான் அவன் யார்?.
5. ஒரு கரண்டி மாவால் ஊர் எல்லாம் தோசை அது என்ன?
6. தண்ணீரில் நீந்தி வரும் தரையில் தாண்டி (பாய்ந்து) வரும் அது என்ன?
7. வெயிலில் மலரும். காற்றில் உலரும் அது என்ன?
8. ஒரு குப்பிக்குள் இரண்டு எண்ணெய் அது என்ன?
9. செம்பு நிறைய கெம்பு அது என்ன? (கெம்பு என்பது சிவப்பு மாணிக்கக்கல்)
10. இரண்டு உறுப்புக்களின் எழுத்துக்களைச் சேர்க்க, முன்னின்று காட்டுவேன் உன்னை. நான் யார்?

www.tamilarangam.net



## உங்களுக்குத் தெரியுமா?

நோபல் பரிசின் இன்றைய மதிப்பு 2லட்சம் அமெரிக்க டாலர்கள்.

ஆசியாவில் நான்கு நாடுகளில்தான் பூமிக்கடியில் ஓடும் ரயில்கள் (U BAHN) உண்டு. அவற்றில் இந்தியாவில் உள்ள கல்கத்தாவும் ஒன்று.

தன் காலால் மனிதனை உதைத்தே கொல்லக் கூடிய பலம் வாய்ந்த பறவை தீப்பறவையாகும்.

பார்லிமண்ட ஆட்சி முறை தோன்றியது இங்கிலாந்து நாட்டில்தான். இதற்கு 1265ல் ஆரம்பகர்த்தாவாக விளங்கியவர் சைமன் டீ மாண்ட்ஃபோர்ட் என்பவரே.

நினைவுத் தபால் தலைகளை முதலில் வெளியிட்ட நாடு அமெரிக்காதான். 1893 ஜனவரி மாதம் 2ந்திகதி கொலம்பியக் கண்காட்சியை ஒட்டி வெளியிட்டது.

நீலத் திமிங்கிலம் ஆறு மாத காலம் உண்ணாமல் இருக்கும் சக்தி வாய்ந்தது.

நாய்களுக்கு பாதங்களில்தான் வியர்வைச் சுரப்பிகள் உள்ளன.

யுகோஸ்லாவியாவில் அல்பேனியப் பெற்றோருக்குப் பிறந்த அன்னை தெரேசா 18 வயதில் ஆசிரியராகப் பணியாற்ற 1928ல் இந்தியா வந்தார். 1948ல் இந்தியக் குடியுரிமை பெற்றார்.

இந்தியாவில் உள்ள ஜம்மு காஷ்மீர் என்ற இடம் 14ஆயிரம் அடி உயரத்தில் உள்ளது. இந்த ஊரில் உள்ள தபால் நிலையம்தான் உலகிலேயே மிகவும் உயரமான இடத்தில் அமைந்துள்ளதாகும்.

www.tamilarangam.net





## கேவலம்

காட்டில் இருந்த மிருகங்கள் சிலவற்றிற்கு காட்டு வாழ்க்கை வெறுத்தது. தாங்களும் நாட்டுக்குச் சென்று நகரத்தில் வாழவேண்டும் என விரும்பின. நாட்டுக்குச் சென்று வாழ விரும்பிய மிருகங்களில் கரடியும் ஆடும் ஒருநாள் சந்தித்தன. மனிதர்களின் உடுப்புக்களை எப்படிப் பெறுவது என்று யோசித்தன. வழியில் வந்த காகம் இவர்கள் கதைப்பதைக் கேட்டது. தான் அவற்றை எடுத்துத் தருவதாகக் கூறியது. கரடியும் ஆடும் சந்தோஷப்பட்டன.

காகம் சொன்னபடியே ஒரு வீட்டில் வெளியே காய விட்டிருந்த உடுப்புக்களை எடுத்துக் கொண்டு வந்தது. தானும் ஒரு சிறுமியின் சட்டையைப் போட்டுக் கொண்டது. மூவரும் நாட்டுப் புறம் வந்து நகரத்திற்கு வந்தார்கள். ஒரே இரைச்சலாக இருந்தது. மனிதர்கள் மனிதர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருந்தார்கள். மனிதனுக்கு மனிதன் பயந்து ஓடி ஒளித்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் மூவரும் வேறிடம் சென்றார்கள். அங்கும் மனிதர்களுக்குள் போட்டி பொறாமை, கொலைகள் எல்லாம் நடந்து கொண்டிருந்தன.

www.tamilarangam.net



கரடிக்கு இவற்றைப் பார்க்கக் கவலையாக இருந்தது. அது ஆட்டைப் பார்த்து "இந்த மனிதர்கள் எம்மைவிடக் கேவலமாக இருக்கிறார்கள். நாங்கள் போயும் போயும் இந்த மனிதர்கள் போல ஆக வேண்டும் என நினைத்தது எவ்வளவு கேவலத்திலும் கேவலம். சீ....சீ...வா வா நாங்கள் காட்டிற்கே போய்விடுவோம். மனிதன் வேண்டும் என்றால் காட்டிற்கே வந்து எப்படி வாழ வேண்டும்? என எங்களிடம் கற்றுக் கொள்ளட்டும்" என்று கூறியது. ஆடு தான் மனிதர்களைப் பற்றி உயர்வாகக் கருதிக் கொண்டது தவறு எனக் கூறியபடி உடுப்புக்களைக் கழட்டி எறிந்தது. பின் கரடியுடன் சேர்ந்து காட்டிற்கு திரும்பிப் போனது. அங்கு ஏனைய மிருகங்கள் "மனிதனைப் பற்றி நாங்கள் சொன்னதை நம்பாமல் போனீர்கள். இப்ப நேரில் கண்டீர்கள் சரிதானா?" என்று கேலி பேசின.

1991 தைப்பொங்கல் தினம் தனது இரண்டாவது வயதைத் தொடங்கும் அமுதம் முழுக்க முழுக்கச் சிறுவர்களின் ஆக்கங்களுடனே வெளிவர இருக்கின்றது. உங்ககளிடமிருந்து பலவிதமான ஆக்கங்கள் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. உடனே அனுப்பிவையுங்கள் படம் கீறக்கூடியவர்கள் கதைகளுக்கு ஏற்ற படங்களை ( கறுப்பு மையினால்) வரைந்து அனுப்பவும். உங்கள் ஆக்கங்களுடன் உங்கள் புகைப்படம் பிரசுரமாக வேண்டு என்றால் புகைப்படமும் அனுப்பிவையுங்கள்

அமுதம் தை 91 இதழுக்கு ஆக்கங்கள் அனுப்புகின்ற எல்லா சிறுவர்களுக்கும் பரிசு கா த்திருக்கின்றது. உடனே அனுப்பிவையுங்கள்


ஆசிரியர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அறிவியல் பகுதி



# புவி

இப்புவியில் வாழ்கின்ற நாங்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு குடும்பத்தில் அங்கத்தவராய் இருக்கிறோம். இவ்வாறே நாம் வாழுகின்ற இப்புவியும் விண்வெளியிலுள்ள குடும்பம் ஒன்றில் அங்கத்துவம் வகிக்கின்றது. இந்தக் குடும்பம் ஞாயிற்றுத் தொகுதி எனப்படும். இக்குடும்பத்திற்குச் சூரியனே தலைவன். ஞாயிற்றுத் தொகுதியிலே ஞாயிற்றைச் சுற்றிப் புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, உரானது, நெப்தியூன், புளூற்றோ எனப்படும் நவக்கிரகங்கள் உண்டு. நவக்கிரகங்களின் மிகப் பெரிய கோள் வியாழன். மிகவும் சிறிய கோள் புதன் ஆகும்.

நவக்கிரகங்களுக்குள் பூமியில் மட்டுமே விலங்கினங்களும் தாவரங்களும் வாழ்கின்றன என்பதை நாம் அறிவோம். பூமி அளவிற் சிறியது எனினும் உயிர்கள் உருவாகி வளர்ச்சி எய்துவதற்கு உகந்த வளிமண்டலத்தையும் பொருத்தமான வெப்ப நிலையையும் போதுமான அளவு நீரையும் கொண்டுள்ள ஒரேயொரு கோள் பூமி.

மனிதன் வாழும் புவியானது ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள ஒன்பது கோள்களில் ஒன்றாகும். ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள ஏனைய கோள்களைப் போன்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்.

www.tamilarangam.net



புவியும் ஒரு கோளமே. ஆதிகால மக்கள் புவி ஒரு தட்டையான பொருள் எனக் கருதினர். சிலர் அது சதுர வடிவமானது என்றும் வேறு சிலர் அது தட்டையான தகழி போன்றது என்றும் நம்பினர். புவி அத்தகையது அன்று என ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கிரேக்க அறிஞர்கள் அறிந் திருந்தனர்.

கி.மு.6ம் நூற்றாண்டளவிலே கிரேக்க கணிதவியலறிஞரான பைதரசு என்பார் புவி கோளவடிவமானது எனக் கூறுனார். அதற்கு 200 ஆண்டுகளுக்குப் பின்னர், கிரேக்க ஞானியான அரிஸ் தோத்தில் என்பர் நீண்டகால ஆராய்ச்சிக்குப் பின் புவி கோளவடிவமானது என்ற கருத்தை மேலும் கூறினார்.

சந்திரகிரகணம் நிகழும்போது சந்திரனிலே விழுகின்ற புவியின் நிழல் எப்பொழுதும் வட்ட வடிவாக இருப்பதனால் புவி கோளவடிவாகவே இருக்கும் என அவர் கூறினார். ஆயினும் அக்கருத்தை மக்களோ அதற்கு பிற்பட்ட சந்ததியினரோ ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் நெடுங்காலமாகப் பெரும்பாலான மக்கள் புவி தட்டையான ஒரு பொருள் என்றே நம்பியிருந்தனர்.

இன்று புவி கோளவடிவமானதென்பதை நிறுவுவதற்கு இன்னும் பல சான்றுகள் கிடைத்துள்ளன. விண்வெளிப் பயணங்களின் போது எடுக்கப்பட்ட ஒளிப்படங்களிலிருந்து புவி கோளவடிவமானதென்பது தெளிவாகின்றது. விண்ணிலே அதி உயரப் பறக்கின்ற விமானங்களும் செயற்கைக் கோள்களும் விண்வெளி ஆய்வுப் பயணங்களும் காரணமாக மனிதன் புவியின் கோள் வடிவத்தை நேரிலே கண்ணாற் காணுவது சாத்தியமாகிப் போய்விட்டது. அபொலோ U7 இல் சந்திரனுக்குச் சென்று திரும்பி வந்த விண்வெளிவீரர் பிடித்த ஒளிப்படங்களின் மூலம் இது உறுதிப்படுத்தப் படுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புவி கோளவடிவானதென்பது இன்று யாவரும் அறிந்த உண்மையாகி விட்டது. புவியின் பரப்பளவு 3.132.000.000 சதுர மீற்றர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. புவியின் மத்தியினூடாக வடமுனையையும் தென் முனையையும் இணைத்து வரையப்படுகின்ற கற்பனைக்கோடு புவியச்சு எனப்படும். வடமுனைவும் தென்முனைவும் இரு புள்ளிகளே இந்த அரசின் எல்லை வடமுனைவு என்றும் அதன் தென் எல்லை தென் முனைவு என்று கூறப்படும்.

புவி ஒரு கோளம் என்பதை நாம் அறிவோம். ஏனைய கோள்களைப் புவியும் சூரியனைச் சுற்றி வருகின்றது. புவியானது தன்னைத்தானே சுற்றிக் கொண்டே சூரியனையும் சுற்றி வருகின்றது. — விஜிதா —

---

## பல்நாட்டுப் பொன்மொழிகள்.

நன்மைசெய்வதில்நோக்கத்தைவிடச்செயல்தான் முக்கியம்
தீமையில்செயலைவிடநோக்கமேமுக்கியம். --ஸ்பெயின்

நல்லது செழிப்பா யிராது. —ஸ்பெயின்

நல்லதை உள்ளே வைத்தால், நல்லதை வெளியே எடுக்கலாம். —யூதர்

உலகத்திலுள்ள எல்லாத் தலைகளையும்விட, ஒரு நலல இதயம் மேலானது. —இங்கிலாந்து

உறுதியா யில்லாவிட்டால், நீ நல்லவனாயிருக்க முடியாது. —இங்கிலாந்து

தீமைக்கு உதவி செய்பவன் நன்மைக்குக் கேடு செய்கிறான் —கிரீஸ்

நல்லவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஒரு தெய்வம் தங்கியிருக்கின்றது. —இலத்தீன்

அதிருஷ்டமுள்ளவன் என்பதைக் காட்டிலும், நல்லவன் என்று பெயரெடு. —இலத்தீன்

நன்மை செய்வதில் நாம் சலிப்படையாமல்இருப்போமாக. —புதிய ஏற்பாடு

www.tamilarangam.net



## உங்கள் பகுதி



## யேசுநாதர் வாழ்வில்

இன்றைக்கு இரண்டாயிரம் (2000) ஆண்டுகளுக்கு முன் எருசேலம் நகரில் யேசுநாதர் வாழ்ந்து வந்தார். உண்மை, நீதி, அன்பின் வடிவமாக அவர் விளங்கினார். உண்மையான சமயம் பற்றியும் வழிபாடு பற்றியும் ஊர் ஊராகச் சென்று சொற்பொழிவு செய்து வந்தார். இவரது கருத்துக்களைக் கேட்க பெருந்தொகையான மக்கள் கூடினார்கள். நடக்கப் போகும் சம்பவங்களை முன்னரே தெரிவிக்கும் ஒரு தீர்க்கதரிசியாக இவரை நம்பினார்கள்.

இவரை எதிர்த்தவர்களும் உண்டு. அவர்கள் உண்மைக்கும் நீதிக்கும் மாறாக வாழ்க்கை நடாத்தியவர்கள். ஒருமுறை யேசு நாதர் கோவிலுக்குச் சென்று திரும்பும்போது வழியில் ஒரு பெண்ணை சிலர் கொண்டு வந்து இவர் முன் நிறுத்தினார்கள். "போதகரே இப்பெண் பொய் சொல்லி ஏமாற்றுகிறவள். இவளை இன்று நாம் கையும் மெய்யுமாகப் பிடித்துவிட்டோம். இவளைக் கல்லால் அடித்து தண்டனை வழங்க வேண்டும்" என்றார்கள்.

யேசுநாதர் அமைதியாக ஒன்றும் பேசாமல் நின்றார். "போதகரே! ஏன் அமைதியாக நிற்கிறீர்கள்? என திரும்பவும் அவர்கள் கத்தினார்கள். யேசுநாதர் அவர்களை அன்புடன் பார்த்தார். பின்னர் அவர்களை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோக்கி கூறினார். "குற்றம் செய்பவர்களைத் தண்டிக்கத்தான் வேண் டும் என்றால் உங்களில் யாராவது ஒருவர் குற்றம் எதுவும் செய்யதிருப்பார் களாயின் இப்பெண்ணைத் தண்டிக்கலாம். அப்படிப் பட்ட வர்கள் முன் வரலாம் " என்றார். ஒருவரும் வரவில்லை. யேசுநாதர் மௌனமாக அப்படியே நின்றார். சிறிது நேரம் கழித்து அப்பெண்ணை நிமிர்ந்து பார்த்தார். அந்த இடத்தில் அப்பெண்ணைத் தவிர வேறு எவரும் இருக்கவில்லை. "பெண்ணே! உன்னைக் குற்றம் சொன்னவர்கள் யாரும் நல்லவர்கள் இல்லை. அதனால் உன்னைத் தண்டிக்க அவர்களால் முடியாது. தாமாகவே ஓடிவிட்டார்கள். உன் குற்றங்கள் மன்னிக்கப் படுகின்றன. இனிமேல் நீ குற்றம் செய்யாமல் வாழ்வாயாக என்று யேசு நாதர் கூறினார். அப் பெண் யேசுநாதரை வணங்கி விடை பெற்றுச்சென்றாள்.

செல்வி விஜிதா இராமலிங்கம்

---

தம்பி தம்பி வா வா
தங்கத் தம்பி வா வா
தங்கையைக் கூட்டி ஓடி வா
தங்கையோடு ஓடி வா
தம்பி தம்பி வா வா

செல்வன் பகீரதன் செல்வநாயகம்
பிறந்த திகதி 25.09.82
Berliner Ring 43
5010 Bergheim/Erft

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## விடுகதை விருந்து

1. பொட்டுப் போல இலை இருக்கும்
முத்துப் போல் பூப் பூக்கும்
தின்னத் தின்ன காய் காய்க்கும்
தின்னாத பழம் பழுக்கும்
அது என்ன?

2. நான் ஓட ஓடுவான்
நான் நின்றால் நிற்பான்.
நான் இருந்தால் இருப்பான்.
யார் அவன்?

3. சாந்து போட்ட கோவிலில்
விழுந்து கும்பிட இடமில்லை.
என்ன அது?

4. அண்ணனும் தம்பியும் தனித் தனியே
ஒரு நிமிடத்திற்கு மேல் சேர்ந்து
நிற்க மாட்டார்கள்.
யார் அவர்கள்?

5. தூக்கச் சொல்லி மணி அடிப்பான்.
தூக்கி விட்டால் கதைக்கச் சொல்லுவான்.
யார் அவன்?

செல்வன் அசோகன் நிர்மலராஜா
பிறந்த திகதி 14.07. 81
Buchen hoehe 6a
5014 Kerpen Horrem

---

விடுகதை விருந்துக்கான விடைகள்.

1. முருங்கை மரம் (இலை, பூ, காய்)  2. நிழல்
3. முட்டை  4. மணிக்கூட்டு நிமிடக்கம்பியும், மணிக் கம்பியும்  5. தொலைபேசி(ரெலிபோன்)

www.tamilarangam.net



மிய்யா மிய்யாப் பூனையாம்
மீசைக்கார பூனையாம்
ஆள் இல்லாத நேரத்தில்
அடுப்படிக்குச் செல்லுமாம்
பால் இருக்கும் சட்டியை
பார்த்துக் காலி பண்ணுமாம்
இரவில் எல்லாம் சுற்றுமாம்
எலி பிடித்து தின்னுமாம்



## மழலைப் பாடல்கள்

டெய்சிப் பாப்பா
டெய்சிப் பாப்பா
சத்தம் போடாதே
அம்மா வர நேரம் ஆச்சு
சத்தம் போடாதே!
என்ன வேண்டும்? எது வேண்டும்?
சொல்லு கண்ணே!



தங்கமாலை தங்கக் காப்பு
வாங்கித் தருவேன்.
தாளத்தோடு பாட்டுப் பாடச்
சொல்லித் தருவேன்.
படமும் ஒன்று காட்டுவேன்.
பம்பரமும் வாங்குவேன்.

டெய்சிப் பாப்பா
டெய்சிப் பாப்பா
சத்தம் போடாதே
அம்மா வர நேரம் ஆச்சு
சத்தம் போடாதே

கமலா ஆனந்தன்
CG53 Homburg/Saar

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






ஒரு தகப்பனுக்கு இரண்டு மகன்கள் இருந்தார்கள். அவர்கள் இரண்டு பேரும் செல்வமாக வாழ்ந்தார்கள். இதனால் படிப்பில் அவர்கள் கவனமில்லாமல் இருந்தார்கள். தகப்பனுக்கு ஒருநாள் வருத்தம் வந்து விட்டது. அந்த நேரம் பிள்ளைகள் எழுத வாசிக்கத் தெரியாமல் எப்படி வாழப் போகிறார்கள் என்று கவலைப் பட்டார்.

ஒருமுறை அவர் திடீரென மயங்கி விழுந்தார். வைத்தியர் வந்து பார்த்துவிட்டு மருந்து கொடுத்தார். தகப்பன் கொஞ்ச நேரம் சுகம் அடைந்தார். ஆனாலும் தகப்பனுக்கு தான் திடீரென இறந்து விடுவேன் என்ற நினைவு அடிக்கடி வந்தது. தனக்குப் பிறகு சொத்துக்களை தனது பிள்ளைகளுக்கு பாதி பாதியாகப் பிரித்து ஒரு கடிதம் எழுதினார், பின் கடிதத்தை தலையணைக்கு கீழே வைத்துவிட்டார்.

www.tamilarangam.net



அடுத்த நாள் காலையில் தகப்பன் இறந்து போனார். மகன்மாருக்கு ஒரே கவலையாய் இருந்தது. பெரியவர்களின் உதவியுடன் தகப்பனுக்கு வேண்டிய கடமைகளைச் செய்தார்கள்.

தலையணைக்குக் கீழே இருந்த தகப்பன் எழுதிய கடிதத்தைக் கண்டார்கள். ஆனால் வாசிக்கத் தெரியவில்லை. வேறு படித்த ஒருவரிடம் கொடுத்து என்ன எழுதி இருக்கின்றது என்று கேட்டார்கள். இருக்கிற எல்லாப் பொருளும் பாதி பாதியாக எடுத்துக் கொள்ளுங்கள் என்று எழுதியிருப்பதாக சொன்னார்.

அடுத்தநாள் வீட்டிலிருந்த பானை, சட்டி, கதிரை, கட்டில் என எல்லாப் பொருட்களையும் உடைத்துப் பாதி பாதியாக்கினார்கள். பின்னர் சமைக்கவோ சாப்பிடவோ முடியாமல் கஷ்டப்பட்டார்கள். இவர்களுடைய செயல்களைப் பார்த்து மக்கள் படியாத முட்டாள்கள் என்று கேலி பேசினார்கள்.

செல்வி பிங்கலை இராஜேஸ்வரன்

## பறக்கும் மீன்



*பறக்கும் மீன் உண்மையிலேயே உயரக்கிளம்பிப் பறப்பது இல்லை. அதன் மார்பின் கீழ் உள்ள செதில் போன்ற இறக்கைகளை விரித்துத் தன் வாலால் தண்ணீரை உந்தித் தள்ளி அந்த வேகத்தில் பத்துப் பதினைந்து நொடிகளே அது பறப்பது போலத் தென்பட்டு மீண்டும் நீரில் விழுகிறது.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## அடிமைச் சின்னம் (1)

நாயின் கழுத்தில் அழகான பட்டை இருந்தது. அதிலிருந்து பளபளவென்று மின்னும் நீண்ட சங்கிலி தொங்கியது. காட்டில் அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தது அந்த நாய். அப்போது ஓநாய் ஒன்று அங்கு வந்தது. நாயைப் பார்த்து "நண்பா சுகந்தானே "என்றது. நாய் "என் தலைவன் இருக்கும்வரை எனக்குக் கவலை ஏது?. படுக்க மெத்தை உண்டு. பருகப் பால் கிடைக்கும். உண்ண அறுசுவை உணவு கிடைக்கும்" என்று சொல்லிக் கொண்டு சென்றது.

இதைக் கேட்ட ஓநாய் சிரித்துக் கொண்டே " அருமை நண்பா, உன் கழுத்தில் கிடப்பது என்ன?" என்றது.

"வெல்வெட்டுத் துணியிலான கழுத்துப் பட்டை" என்றது நாய்.

"தொங்குவது என்ன"எனக் கேட்டது ஓநாய்.

"வெள்ளிச் சங்கிலி"

இவையெல்லாம் அடிமைச் சின்னங்கள். அறுசுவை உணவுக்காக அடிமையாகலாமா?" என்றது ஓநாய்.

அறிவுரை: மக்கள் கூட்டம் பிறநாட்டுக்கோ இனத்துக்கோ அடங்கி நடப்பது சிறப்பானதல்ல. மனிதன் தன் வாழ்க்கையில் சுதந்திரமுள்ளவனாக வாழவேண்டும்.

www.tamilarangam.net



## வெட்டுப்பட்ட பாம்பு

குடிசையில் வாழ்ந்து வந்தான் ஒரு கிராமவாசி. பக்கத்தில் ஒரு நல்ல பாம்பு குடியிருந்தது. ஒருநாள் அப்பாம்பு அவனுடைய குழந்தையைக் கடித்துவிட்டது. நஞ்சு தலைக்கேறி குழந்தை செத்துவிட்டது. கிராமவாசியோ கதறி அழுதான். தன் குழந்தையைக் கொன்ற அந்த பாம்பைக் கொல்ல வேண்டுமென்று உறுதி பூண்டான்.

மறுநாள் பாம்பைப் பார்த்தபடியே கையில் கோடாரியுடன் இருந்தான். பாம்பு வெளியே வந்தது. ஆத்திரத்தோடு பாம்பை வெட்டினான். குறி தவறியது. பாம்பின் வால் மட்டும் துண்டிக்கப்பட்டது.

நாட்கள் சில கழிந்தன. வாலிழந்த பாம்பு சினங் கொண்டு தன்னைக் கொத்திவிடுமோ எனக் கிராமவாசி அஞ்சினான்.பாம்புடன் சிநேகமாக இருக்க விரும்பினான். பாம்பின் புற்றருகே சென்று பாலும் ரொட்டியும் வைத்தான்.

பாம்பு அக்கிராமவாசியைப் பார்த்துக் கூறியது. "நான் உன் குழந்தையைக் கொன்று விட்டேன். நீ எனது வாலை வெட்டிவிட்டாய். உன்னைப் பார்க்கும்போதெல்வாம் எனக்கு அந்த நிகழ்ச்சிதான் நினைவுக்கு வரும் என்றது.

அறிவுரை: புண்பட்டவன் மறக்கமாட்டான். பட்டதையே மனதில் நினைக்கும்போதெல்வாம் கோபம் பொங்கும். பழி வாங்க வேண்டும் என்கிற எண்ணம் வரும். அடித்தவனுக்கும் அமைதி இல்லை. எப்போதும் இடைஞ்சல் செய்வானோ என்கிற எண்ணமே தோன்றும்.


www.tamilarangam.net



உலக அதிசயங்கள்

# ஹாலிகார்ளுசஸ் கல்லறை

இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன் ஏஜியன் கடற்கரையில் ஒரு அழகிய நகரம் இருந்தது. அதன் பெயர் ஹாலி கார்ளுசஸ். அது கிரேக்கர்களின் குடியிருப்பாக இருந்தது. காரிக் மன்னன் மோசோவஸின் சமாதியின்மீது இந் நகரில் ஒரு மாபெரும் நினைவுச் சின்னம் நிறுவப் பட்டது. இதனை அவனது மனைவி ஆர்டிமிசிஸ் நிறுவினுள், இதைச் சுற்றி முன்னூறு அடிக்கு எல்லாப்பக்கத்திலும் அழகிய நடைபாதை அமைக்கப் பட்டது. இந்த அழகிய நினைவுச் சின்னம் பழங்காலத்திய ஏழு அற்புதங் களில் ஒன்ருகக் கருதப்படுகிறது. இது கி. மு. நான்காவது நூற்ருண்டில் கட்டப்பட்டது. ஆனுல் இதனை கி. பி. நான்காவது நூற்ருண்டில் துருக்கி யர்கள் சேதப்படுத்தி அழித்தனர்.



www.tamilarangam.net



நீதிபதி ஒருநாள் வழக்கம்போல நீதிமன்றத்தில் அமர்ந்திருந்தார். நான்குபேர் இளைஞன் ஒருவனைக் கட்டி இழுத்து வந்தனர். அந்த இளைஞன் அழகானவனாக இருந்தான்.

"நீதிபதி அவர்களே! இந்த இளைஞன் திருடும்போது எங்களிடம் கையுங் களவுமாகப் பிடிபட்டான். ஆகவே தங்களிடம் பிடித்துக் கொண்டு வந்தோம். இளம் வயதினான இவனைத் தாங்கள் தண்டிக்காமல் அறிவுரை கூறி அனுப்பிவிடுங்கள்" என்று கூட்டி வந்தவர்கள் கூறினார்கள்.

அங்கிருந்த மற்றவர்களும் அவனைத் தண்டிக் வேண்டாமென கேட்டுக் கொண்டார்கள்.

நீதிபதி அவ்விளைஞனைப் பார்த்து "திருடுவது தீமை எனவும் அப்படிப்பட்ட வாழ்வு கேவலமானது மட்டுமல்ல, பாவமானதுங் கூட என்று கூறிவிட்டு இதுதான் உனக்கு கடைசி மன்னிப்பு என அவர் கூறுவார் எனப் பலரும் எதிர்பார்த்தனர்.

## வாக்குறுதி

ஆனால் நீதிபதியோ அவனிடம் அன்பாகப் பேசி அவனைக் கவர்ந்தார். பிறகு எப்பொழுதும் வாழ்க்கையில் உண்மையே பேசுவேன் என வாக்குறுதி தருமாறு கேட்டார்

அவனும் நீதிபதி கேட்டுக் கொண்டபடி வாக்குறுதி கொடுத்துவிட்டு விடுதலை பெற்று வீட்டிற்குச் சென்றான்.

மறுநாள் இரவு திருட வேண்டும் என்ற எண்ணத்தில் இளைஞன் வீட்டைவிட்டுப் புறப்பட்டான். "யாராவது தன்னைப் பார்த்து எங்கே செல்கிறாய்? எனக் கேட்டால் என்ன பதில் சொல்லுவது? எப்போதும் உண்மையே பேசுவேன்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுத்து விட்டேன். திருடி விட்டுத் திரும்பினாலும் யாராவது கேட்டால் உண்மையைத்தானே சொல்ல வேண்டும் தண்டனையிலிருந்து எப்படித் தப்புவது என்று சிந்தித்தான்.


உண்மை பேசுவதென்றால் தன்னால் இனித் திருட முடியாது என்ற முடிவிற்கு வந்து அவன் அன்று முதல் நல்லவனாக மாறினான்.



### உயரமான மரம்

கலிபோர்னியாவிலுள்ள கோஸ்ட் ரெட் உட் எனப்படும் ஒருவகை மரங் களே உலகில் மிக உயரமாக வளர் பவை. இந்த வகையின் ஒவ்வொரு மரமும் சுமார் 368 அடி உயரத்திற்கு வளர்கிறது.

### நீண்டகால வாழ்வு



முதுகெலும்பு இன ஜீவராசிகளில் ஆமைதான் நீண்டகாலம் உயிர் வாழ்வது 160 ஆண்டுகளுக்கும் மேலாகக் கூட ஆமைகள் உயிரு டன் இருந்ததாகப் பலர் கூறிய போதிலும் பதிவேடுகள் அவை 116 வருடகாலம் உயிர் வாழ்ந்த தைக் குறித்துள்ளன.

www.tamilarangam.net



# விஞ்ஞானப் படைப்புகளும் கண்டு பிடிப்புகளும்

1. சூரிய மண்டலத்தில் எவ்வளவு கிரகங்கள் உள்ளன?
2. கிரகங்களில் மிகப் பெரியது எது?
3. கிரகங்களில் மிகச் சிறியது எது
4. எது சூரியனுக்கு மிக அருகில் உள்ளது?
5. சூரியனிலிருந்து பூமி எத்தனையாவது இடத்தில் உள்ளது?
6. சூரிய மண்டலத்தில் இந்த கிரகங்களைத் தவிர இன்னும் வேறு ஏதாவது உள்ளதா?
7. நமக்குத் தென்படும் நட்சத்திரங்களில் மிகவும் பிரகாசமானது எது?
8. கணிதத்தின் வாயிலாக எந்த கிரகம் கண்டுபிடிக்கப் பட்டது?

## விடைகள்.

விஞ்ஞானம்:

1. ஒன்பது, (பூமியையும் சேர்த்து)
2. வியாழன். இதன் குறுக் களவு விட்டம் 88,844 மைல்கள்.
3. ப்ளூடோ. இதன் குறுக்க ளவு விட்டம் 1860 மைல் கள்.
4. புதன்.
5. மூன்றாவது.
6. எண்ணற்ற சிறு அணுக்கள், அணுக் குவியல் கூட்டங் கள் உள்ளன. குறிப்பாக செவ்வாய், வியாழன் கிரகங்களுக்கு இடையில்.
7. சிரியஸ்-ஏ.
8. நெப்ட்யூன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெருமைக்குரியவர்கள்

நீல் ஆம்ஸ்ட்ராங் .

சந்திரனுக்குச் சென்று அதில் காலடி எடுத்து வைத்த முதல் மனிதர் என்ற பெருமையைத் தேடி தந்த அமெரிக்க நாட்டவர். 21.07.69ம் ஆண்டு இச்சாதனை நிகழ்ந்தது.

சி.வி. ராமன்

பௌதிகத் துறையில் ராமன் விளைவு எனப்படும் புதிய உண்மையைக் கண்டு பிடித்து நோபல் பரிசு பெற்றவர். பெங்களூரிலுள்ள இந்திய விஞ்ஞானக் கழகத்தை நிறுவியவர். லெனின் சமாதானப் பரிசும் இவருக்கு வழங்கப் பட்டது.

யூரி ககாரின்

ரஸ்யாவைச் சேர்ந்த இவர்தான் உலகின் முதல் விண்வெளி வீரர். 1961 ஏப்ரல் 12ந் திகதி இப்பெருமையைப் பெற்றவர். 1968ல் ஒரு விமான விபத்தில் உயிர் துறந்தார்.

ஷேக்ஸ்பியர்

உலக முழுவதும் கடந்த 300 ஆணங்டுகளாக ஒருவர் எழுதிய நாடகங்கள் நடிக்கப் படுகிறது என்றால் அந்தப்


www.tamilarangam.net



பெருமைக்குரியவர் வில்லியம் ஷேக்ஸ்பியர் மட்டும்தான். இவரது நாடகங்கள் பல மொழிகளில் மொழி பெயர்த்து எழுதப்பட்டுள்ளது.

ரவீந்திரநாத் தாகூர்.

நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர். 1913ம் ஆண்டு இலக்கியத்துக்காக இப்பரிசு வழங்கப்பட்டது. இந்தியாவின் தேசிய கீதமான "ஜன கண மன" பாடலை இயற்றிவர்.



www.tamilarangam.net



## உங்கள் கடிதங்கள்.

அன்புள்ள அமுதம் ஆசிரியருக்கு;

இது எங்கள் அமுதம். எனவே இதில் சிறுவர் பகுதி என்று இருப்பது முறையா? அதை உங்கள் பகுதி என மாற்றுங்கள். தினமும் படிக்கக் கூடியதாக, நாங்கள் சிரிக்கக் கூடியதாக, செய்து பார்க்க் கூடியதாக நிறையச் சேர்க்க வேண்டும். இந்த நாட்டில் எமக்கு எல்லாம் அன்னிய நண்பர்கள். நீங்கள்தான் எமது நண்பர்கள். அமுதம் வாசகர்கள் ஒருவருக்கு ஒருவர் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள "பேனா நண்பர்" போன்ற பகுதியை அமுதத்தில் இடம் பெற்றால் நல்லது.

இதன் மூலம் நாம் வாழ்வது தமிழ்க் கலாச்சாரத் தில்தான் என்கிற நினைவு ஏற்படுத்தும். புத்தாண்டில் அமுதம் மூலம் புதிய நண்பர்கள் கிடைப்பார்கள் என எதிர்பார்க்கிறேன்.

8720 Schweinfurt

அன்புடன் ரவி

அமுதம் புதிய அழகுடன், புதிய விடயங்களுடன் வெளிவருவது எமக்கு மகிழ்ச்சியாக உள்ளது. அட்டைப்படம் நன்றாக இருந்தது. சிறுவர்களின் ஆக்கங்கள்தான் கூடுதலாக வரவேண்டும். சிறுவர்களின் படங்களையும் வெளியிடுங்கள்.

CH 7000 CHUR (SCWEIZ)

திருமதி ஜெயந்தினி
சண்முகநாதன்

www.tamilarangam.net



உங்கள் கடிதம்

அன்பின் அமுதம் ஆசிரியர் அவர்கட்கு.

சிறுவர் அமுதத்தின் வளர்ச்சி கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். இனிவரும் புத்தாண்டில் இருந்து ஒவ்வொரு அமுதத்தின் அட்டையில் அல்லது அன்புச்சிறுவர்களே பகுதியில் பெரியோர்களின் பொன்மொழிகளை எழுதி வந்தால் இன்னும் அமுதம் தரம் பெறும். குழந்தைகளுக்குப் பொருத்தமான பொன் பொன்மொழிகளே இடம் பெறுதல் நல்லது.

திருமதி ஆ.பிரான்ஸிஸ்
5170 Juelich

---

அன்பு மாமாவுக்கு;

எனது நண்பன் வீட்டில் "அமுதம்" கண்டேன். கதைகளை வாசித்தேன். மாமா எனக்கு அமுதம் அனுப்பி வைப்பீர்களா? தமிழ் அறிவை விருத்தி செய்ய அமுதம் உதவுமா? மாமா அமுதம் பெற எவ்வளவு முத்திரைகள் அனுப்பி வைக்கவேண்டும்? உங்கள் புத்தகத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப் பேன. மாமா இத்துடன் வினாவிடைப்போட்டி எழுதி அனுப்பியுள்ளேன். பிந்தி அனுப்பியதற்கு மன்னிக்கவும். பரிசுப் போட்டியில் என்னையும் சேர்க்கவும்.

4270 Dorsten 2 வி.துஷியந்தன்

---

அட்டைப் படம்..

ஏர் பின்னது உலகம் என்று வள்ளுவரும்
உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
என்று பாரதியாரும் சொன்னவற்றை மனதில்
கொள்ளுவோம்.

www.tamilarangam.net



## அமுதம் பதில்கள்

சிறுவர் சஞ்சிகையான அமுதத்தில் "சிறுவர் பகுதி" என்றிருப்பது முறையா? எனச் சுட்டிக் காட்டிய 8720 Scweinfurt ரவிக்கு எனது நன்றிகள். இனிமேல் உங்கள் பகுதி என வரும் சரிதானே?

உங்களுடைய பேனா நண்பர் யோசனையும் வரவேற்கக் கூடியதே. புத்தாண்டில் இருந்து ஒவ்வொரு மாதமும் பிறந்தநாள் கொண்டாடும் அமுதத்தின் வாசகர்களின் முகவரிகள், புகைப்படம், அவரது விபரங்கள் ஆகியவற்றைப் பிரசுரித்து அவர்களுக்குப் பிறந்தநாள் பரிசாக புத்தகங்கள் அனுப்பி வைக்க எண்ணியுள்ளேன். எனவே புத்தாண்டில் இருந்து புதிய நண்பர்கள் எல்லோருக்கும் கிடைப்பார்கள்.

சுவிஸில் இருந்து (7000 CHUR) திருமதி சண்முகநாதன் குறிப்பிட்டபடி, சிறுவர்களின் ஆக்கங்களையே முழுதாகக் கொண்டதாக அமுதம் தை 91 இதழ் வெளி வருகின்றது. கூடிய விரைவில் அமுதத்தில் சிறுவர்களின் ஆக்கங்கள்தான் கூடுதலாக வெளிவர உள்ளன.

தனது நண்பனின் வீட்டில் அமுதம் கண்டு அமுதப் பிரியன் ஆக மாறிய துஷியந்தன் அறிவது, அமுதம் எனது தனிப்பட்ட முயற்சியினாலே வெளிவருகின்றது. எதுவித சமூக நிறுவனங்களின் உதவியும் அமுதத்திற்கு கிடைக்கவில்லை. நீங்கள் முப்பது டீ.எம் அனுப்புவதன் மூலம் ஒரு வருடத்திற்கு அமுதம் தொடர்ந்து பெறமுடியும். அத்துடன் உங்கள் பிறந்த நாளில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உங்களுக்குப் பயன்படக்கூடிய புத்தகங்களும் பரிசாக வரும் வினாவிடைப்போட்டி விடுகதைப் போட்டி என்பனவற்றிலும் பரிசாகப் புத்தகங்கள் பெறமுடியும்.

அமுதம் தமிழ் வளர்ச்சிக்கு உதவுமா? எனக் கேட்டிருந்தீர்கள். நிட்சயமாக உதவும் என்பதில் சந்தேகம் இல்லை. ஜேர்மனியில் உள்ள 31 தமி தமிழ்ச் சிறுவர்கள் வினாவிடைப் போட்டி, விடுகதைப் போட்டி யில் பங்கு பற்றியுள்ளார்கள் என்பதில் இருந்து தெரியவில்லையா?

தை 91விருந்து "உங்கள் தமிழ்" என்று ஒரு பகுதி வெளிவர உள்ளது. பி.எச்.டி போன்ற ஆராய்ச்சிக்கு வேண்டிய தமிழ் இலக்கணங்களை எழுதாமல் சாதாரண வாழ்க்கைகுத் தேவையான தமிழை, இலகுவாக, விளையாட்டாக உங்களுக்கு எழுதிப் படிப்பிக்க இருக்கிறேன். எனவே "அமுதம்" தமிழ் அறிவை வளர்க்கும் தனது பணியில் மேலும் ஒரு அத்தியாயத்தை தொடங்குகிறது.

அன்புடன் சின்ன ராஜேஸ்வரன்
(ஆசிரியர் சிறுவர் அமுதம்)


---

## அரிய செய்திகள்

உலகில் மொத்தம் 5000 மொழிகள் உள்ளன. இந்தியாவில் 845 மொழிகள் உள்ளன. ஆங்கிலத்தில் 7,90,000 வார்த்தைகள் உள்ளன. ஆங்கிலம் உலகில் 400,000,000 மக்களால் பேசப்படுகின்றது. உலகிலே அதிக மக்களால் பேசப்படும் மொழி வட சைன மொழியாகும். உலகில் 67,50,00,000மக்கள் பேசுகின்றனர்.

www.tamilarangam.net

# AMUTHAM




KINDERFREUNDLICH MAGAZINE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்